**Starting time 12.03 P.M.**

**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 85/2006**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 06.06.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : பாப்பாத்தி (எ) கலா | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling: | | Age | : |

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u> வழக்கு சொத்து என்பது வீடும் அதற்கு மேற்குபுறமுள்ள காலி இடம் தான் என்றால், ஆமாம். வா.சா.ஆ.1-ல் நல்லமுத்து வாரிசுளிடமிருந்து நான் கிரயம் பெற்றேன் என்றால், ஆமாம். அதில் 3 தாக்குகளில் முதல் தாக்கில் 40 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட 79.53 ச.மீ அளவுள்ளவீட்டை கிரயம் பெற்றுள்ளேன் என்றால், ஆமாம்.

2. 2-வது தாக்கல் கிணறு குறிப்பிட்டு வாங்கியுள்ளேன் என்றால், ஆமாம். 3-வது தாக்கில் காலி இடமாகத்தான் வாங்கினேன் என்றால், ஆமாம். 2-வது தாக்கில் உள்ள கிணற்றில் இருந்து 12 அடி தூரத்தில் தான் 2-ஆம் பிரதிவாதியின் வீடு இருக்கிறது என்றால், சரியல்ல. அவருடைய வீட்டிலிருந்து என்னுடைய வீடு வரைக்கும் தான் 12 அடி. கிரயம் பெற்ற போது அந்த வீட்டின் கதவு எண்கள் 103 மற்றும் 104 என்றால், சரிதான்.

3. நான் கிரயம் பெற்ற கிரய ஆவணங்களில் அனுபவப்படி பாத்தியப்படி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால், ஆமாம். அனுபவப்படி பாத்தியப்பட்டது என்று வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால், பத்திரத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. வா.சா.ஆ.5-ல் ஆத்தூர் நகராட்சி ஆணையாளர் அவர்கள் வீட்டு வரி மாற்றம் செய்ததற்கான உத்தரவின் நகல்

என்றால், அதில் கதவு எண். 103 மற்றும் 104 க்கு தான் உத்தரவு பெற்றுள்ளார்கள் என்றால், ஆமாம். 102 பி, 102 டி அனைத்திற்கும் உள்ளது.

4. வா.சா.ஆ.6-லும் கதவு எண். 103, 104 க்கு தான் சொத்து வரி ரசீது ஒப்படைத்துள்ளேன் என்றால், ஆமாம். 4-ஆம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் என்ன என்றால், தெரியாது. அவரது தகப்பனார் பெயர் தங்கமுத்து தாயார் பெயர் லட்சுமி என்றால், தெரியாது. 20036-ல் நான் கிணற்றுப் பகுதியை நான் கிரயம் பெற்றேனா என்றால், இல்லை. நான் எப்போதும் கையொப்பம் தான் போடுவேன் என்றால், ஆமாம்.

5. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதானா என்றால், இல்லை. எவ்வளவு நீளம், அகலம் உள்ள இடத்தை அனுபவப்படி கிரயம் பெற்றேன் என்ற விவரத்தை வழக்குரையில் நான் சொல்லவில்லை என்றால், சரியல்ல. வழக்குரை சொத்து விவரத்தில் கிரயம் பெற்ற போது இருந்த கதவு எண். 103 மற்றும் 104 ஐதான் சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால், ஆமாம்.

6. அய்யம்மாள், ராமநாதன் (எ) பூபாலன் என்பவர்களிடமிருந்து கிரயம் பெற்ற போது கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொள்ளும் பாத்தியம் என்று குறிப்பிட்டுதான் கிரயம் பெற்றேன் என்றால், நாங்கள் வாங்கியபோது கிணறு பாழடைந்து இருந்தது. அந்த கிணறு இன்றைய தேதி வரையிலும் பயன்பாட்டில்தான் இருக்கிறது என்றால், சரியல்ல. அந்த கிணற்றில் 1991-ல் எனக்கு கிரயம் செய்து கொடுத்தவர்களுக்கு 5-ல் 2 பாகமும் 2 ஆம் பிரதிவாதிக்கு 5 ல் 2 பாகமும், கருப்பாயி என்பவருக்கு 5 ல் 1 பாகமும் பாத்தியப்பட்டது என்றால், அது பற்றி எனக்கு தெரியாது.

7. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே அருணாச்சலம், ராஜேந்திரன் லட்சுமி ஆகியோர் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தார்கள் என்றால், இல்லை. நன் வாங்கியபோது நல்லமுத்து வாரிசுதாரர்களுக்கு அந்த இடத்தில் கீழ்மேலாக 46 அடி சொத்து இருக்கவில்லை என்றாலும், எனவே நான் மேற்படி அளவு குறிப்பிட்டு வாங்கியதே தவறு என்றால், சரியல்ல. வா.சா.ஆ.3 மற்றும் 4-ல் உள்ள சொத்துக்கள் இரண்டுமே வடக்கில் ஒன்றும் தெற்கில் ஒன்றும் தான் உள்ளது என்றால், ஆமாம்.

8. அனுபவப்படி பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டு நான் வாங்கிய சொத்திற்கு எந்த

ஆவணமும் ஒப்படைக்கவில்லை என்றால், சரியல்ல. பத்திரம் கொடுத்துள்ளேன். நான்தான் அந்த சொத்தில் அனுபவத்தில் இருக்கிறேன் என்பதை காட்ட சான்று ஒப்படைத்துள்ளேனா என்றால், பட்டா ஒப்படைத்துள்ளேன். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் கிணறு இல்லை என்றும், என்னுடைய கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் கிணறு மூடப்பட்டுவிட்டது என்று முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், இல்லை.

9. நான் தாக்கல் செய்துள்ள தாவா மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள ஏ, டி பகுதியில் நான் சுவர் எழுப்பியபோது ராஜேந்திரனும், மற்றும் அவரை சேர்ந்தவர்களும் வந்து தடுத்துவிட்டதாக நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால், சரியல்ல. நல்லமுத்து வாரிசுகளுக்கு உரிமையே இல்லாத சொத்துக்களை நான் கிரயம் பெற்றுக் கொண்டு அதனடிப்படையில் நான் தாவாவை தாக்கல் செய்ததே தவறு என்றால், சரியல்ல.

10. அந்த இடம் எனக்கும் 2 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கும் பொதுவான இடம் என்றாருமு, இன்றைய தேதி வரையிலும் அந்த கிணறு பயன்பாட்டில்தான் இருந்து வருகிறது என்றால், சரியல்ல. வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

Ending Time: 12.29 P.M.

(ஒப்பம்/- N. திலகேஸ்வரி)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ.), ஆத்தூர்.